16.02.2026

அ.வ.எண். 820/2017

வா.சா.2 – திரு. விக்னேஷ்குமார் த/பெ.சண்முகசுந்தரம்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 16.02.2026 is accordance with the provision of Act X of 3331

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை. என்னை சாட்சியம் அளிக்க துரைராஜ், கந்தசாமி அழைத்தனர். எனக்கு வழக்கு பற்றி முழுவிவரம் தெரியும் என எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். துரைராஜ் மற்றும் கந்தசாமி, ஆகியோர் சுப்பிரமணியம் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளனர், வேறு யார் மீதும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் ஜெயக்குமார் மற்றும் தங்கராஜ் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளனர். வாதிகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் சென்னியாண்டவர் கோவிலுக்கு செல்ல மாமூலாக உள்ள தடம் தற்போது ஆக்கிரமிப்பில் உள்ளது, அதனால் ஆக்கிரமிப்பை எடுக்க வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

2. எத்தனை ஆண்டுகளாக தடம் செல்கிறது என்றால் எனக்கு தெரிந்து 20 -30 ஆண்டுகளாக தடம் உள்ளது. மேற்படி தடம் எந்தெந்த காலைகளில் செல்கிறது என என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். தடம் மேல்கோட்டில் இருந்து கிழக்கு நோக்கி செல்லும்போது சுப்பிரமணியம் வீட்டிற்கு கிழபுறமாக தெற்கு சென்று மீண்டும் கோவில் வரை கிழக்கு செல்கிறது. எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சுப்பிரமணியன் பூமியின் எல்லையில் தடம் செல்வதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சுப்பிரமணியன் பூமி என்ன காலையில் உள்ளது என்பது பற்றி தெரியாது என்றால் சரிதான். புல வரைபடத்தில் பார்க்கும்போது சுப்பிரமணியன் இடத்தை ஒட்டி தடம் செல்கிறது.

3. புல வரைபடத்தை நான் எங்கிருந்து எடுத்தேன் என்றால் என் அண்ணன் துரைராஜ்(2 ம் வாதி) காட்டினார். நான் வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புல வரைபடத்தை தடம் இருந்திருந்தால் அதை

இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. புல வரைபடத்தில் எத்தனை அடி நீள, அகலத்தில் தடம் செல்கிறது என்றால் தடம் காட்டப்பட்டிருந்தது, அடி காட்டப்படவில்லை. நான் பார்த்த புலப்படத்தில், எந்தெந்த காலைகளின் வழியாக நீள, அகலத்தில் தடம் செல்கிறது என குறிப்பிட்டிருந்தது என்றால் சரிதான். எனக்கு நினைவில்லை, தடம் செல்கிறது.

4. எந்த காலையின் புலப்படம் பார்த்தேன் என்றால் நினைவில்லை. எந்த காலையின் புலப்படம் பார்த்தேன் என்று நினைவில்லாததால் எந்தெந்த காலைகளின் வழியாக தடம் செல்கிறது என என்னால் சொல்ல முடியாது என்றால் புலப்படத்தை பார்த்து தான் சொல்ல முடியும். என்னிடம் காட்டப்படுவது காடாம்பாடி கிராமம், புல எண்.310/1 என்றால் இது யாருடைய இடம் என்று தெரியாது. புல எண்.310/1ல் தடம் காட்டப்பட்டுள்ளதா என்றால் இந்த ஆவணத்தில் இல்லை. நான் வழித்தடத்தை எதற்காக பயன்படுத்தினேன் என்றால் கோவிலுக்கு செல்ல பயன்படுத்தினேன். கோவிலுக்கும், எனக்கும் என்ன சம்மந்தம் என்றால் முன்னோர்களிலிருந்து வழிபட்டு வருகிறோம்.

5. 2006 ம் ஆண்டு சென்னியாண்டவர் கோவில் நிர்வாகியாக இருந்தேன். நான் கோவில் உறுப்பினராக உள்ளேன். சென்னியாண்டவர் கோவில் நிர்வாகியாக இருந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் உறுப்பினர் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2006 ம் ஆண்டு சென்னியாண்டவர் கோவில் உறுப்பினராக என்னை எவ்வாறு தேர்ந்தெடுத்தனர் என்றால் எனது மூத்த பெரியப்பா கூட்டம்(சென்னியப்பன், சின்னப்பன், கந்தசாமி) ஆகியோர் தேர்ந்தெடுத்தனர். கோவில் எந்த காலையில் உள்ளது என்றால் தெரியாது.

6. சுப்பிரமணியன் நிலத்தில் எந்த எல்லையில் தடம் செல்கிறது என்றால் தெற்குகோட்டில் தடம் செல்கிறது. எந்த காலையில் கோவில் உள்ளது என தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குரை 2ம் அயிட்ட சொத்தில், சென்னியாண்டவர் கோவில் புல எண்.310/2 காலையில் உள்ளது

என குறிப்பிடப்பட்டுள்ளது. 2 ம் அயிட்ட சொத்திற்கும், எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் உறுப்பினராக உள்ளேன். 2 ம் அயிட்ட சொத்தை பொறுத்து அச்சொத்தின் உண்மையான உரிமையாளர் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் கோவில் டிரஸ்ட் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளனர். அருள்மிகு சென்னியாண்டவர் கோவில் டிரஸ்ட் ஆகும். மேற்படி டிரஸ்ட்டின் முகவரி என்ன என்றால் அருள்மிகு சென்னியாண்டவர் கோவில், காடம்பாடி ஆகும்.

7. 2 ம் அயிட்ட சொத்திற்கு உண்மையான உரிமையாளரான ஈஸ்வரி டிரஸ்ட் மற்றும் அதன் நிர்வாகிகள் மீது இந்த நீதிமன்றத்தில் அ.வ.எண்.139/2024 வழக்கு தாக்கல் செய்து, அதில் நானும் எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். சுப்பிரமணியத்திற்கு ஒதுக்கப்பட்ட பூமியை நான் எவ்வாறு சொல்கிறேன் என்றால் சுப்பிரமணியம் அந்த பூமியில் இருக்கிறார் என்பதால் நடைமுறையில் எனக்கு தெரியும். மேற்படி தடம் முழுவதும் சுப்பிரமணியம் காட்டிற்குள் வருகிறதா என்றால் சுப்பிரமணியம் காட்டிற்குள்ளும் செல்கிறது. தடமானது மேல்கோட்டில் இருந்து கிழக்கு நோக்கி சென்று சுப்பிரமணியம் வீடு கட்டிய இடத்தில் இருந்து தெற்கு சென்று கிழக்கு நோக்கி கோவிலுக்கு செல்கிறது.

8. 1 ம் பிரதிவாதி எப்போது வீடு மற்றும் காம்பவுண்ட் சுவர் கட்டினார் என்றால் 2016 ம் ஆண்டு கட்டினார். எந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது வீடு கட்டினார் என்றால் சுப்பிரமணியம் மற்றும் கந்தசாமிக்கு வழக்கு நிலுவையில் இருக்கும்போது கட்டினார். ஒரே நாளில் வீடு கட்டினாரா என்றால் தடத்தை ஒதுக்கி கொடுப்பதாக சொன்னார். எந்த ஓரத்தில், தடத்தை ஒதுக்கி தருவதாக யார் யாரிடம் சொன்னார் என்றால் பொதுவாக கந்தசாமி மற்றும் துரைராஜ், நான் மற்றும் அனைவரும் சென்று கேட்டோம். காலம் காலமாக சுப்பிரமணியம் காட்டின் வழியாக தடம் செல்கிறது என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு ஆவணங்கள் இருந்திருந்தால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. அவ்வாறு தாக்கல் செய்யாததற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் நான் இந்த வழக்கில் 3 ம் நபர் ஆவேன்.

9. வாதி எனக்கு வேண்டியவர் என்பதாலும், 2ம் அயிட்ட சொத்து குறித்து உண்மையான உரிமையாளர்கள் வழக்கு தாக்கல் செய்திருப்பதாலும், 1ம் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில், இந்நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. எனக்கு உண்மையில் எந்தெந்த காலையில் எவ்வாறு தடம் செல்கிறது என அறுதியிட்டு சொல்ல முடியாததால் 1ம் பிரதிவாதியின் காட்டில் தடம் செல்கிறது என சொல்வது ஏற்றுக்கொள்ளகூடியதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur